# மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் வால்பாறை

முன்னிலை : திருமதி.என்.மீனாட்சி, பி.ஏ., பி.எல்.,
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், வால்பாறை.
2026 ஆம் வருடம் மே தி ங்கள் 07 ஆம் நாள் வியாழக்கிழமை
விசுவாவசு வருடம் சித்திரை மாதம் 24 ஆம் நாள்
சுருக்குமுறை வழக்கு எண்:35/2026

**வால்பாறை காவல் நிலைய குற்ற எண் :02/2026**

CNR NO: TNCB150000000612026

குற்றமுறையிடுபவர் : அரசுக்காக:– காவல் ஆய்வாளர்,
வால்பாறை காவல் நிலையம், குற்ற எண்:02/2026

எதிரியின் பெயர் : இஸ்மாயில் (43),
த/பெ. ஹம்சா, கோழிக்கோடு .

<table>
<tr><td colspan="6">மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற 07.04.2021 நாளிட்ட R.O.C No. 814/2020 RG/F1 (P.Dis.No.36/2021) உத்தரவின்படி வழக்கின் சுருக்கம் கீழ்கண்டவாறு விவரிக்கப்படுகிறது.</td></tr>
<tr><td>வ. எண்</td><td colspan="5">வழக்கின் சுருக்கம்</td></tr>
<tr><td rowspan="2">(i)</td><td rowspan="2">எதிரியின் அடைப்பு காவல் நாட்கள் :</td><td colspan="2">எதிரியின் பெயர்</td><td>அடைப்பு காவல் நாள்</td><td>விடுவிப்பு நாள்</td></tr>
<tr><td>1</td><td>இஸ்மாயில்</td><td>–</td><td>–</td></tr>
<tr><td rowspan="2">(ii)</td><td rowspan="2">புகார் தாக்கல் செய்த நாள் மற்றும் இறுதி அறிக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்த நாள் :</td><td colspan="2">புகார் தாக்கல் செய்த நாள்</td><td colspan="2">இறுதி அறிக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்த நாள்</td></tr>
<tr><td colspan="2">10.02.2026</td><td colspan="2">10.02.2026</td></tr>
</table>

MEENATCHI MURUGAN Digitally signed by MEENATCHI MURUGAN Date: 2026.05.08 11:49:18 +0530

07.05.2026

Dm Cum Jm,
Valparai.

<table>
<tr><td rowspan="1">(iii)</td><td>மேல்விசாரணைக்காக வழக்கை அமர்வு நீதிமன்றத்திற்கு அனுப்ப உத்தரவிடப்பட்ட நாள்</td><td>:</td><td colspan="4">-</td></tr>
<tr><td>(iv)</td><td>கு.வி.மு.ச பிரிவு 228, 240, 246 மற்றும் 251–ன் கீழ் எதிரியிடம் கேள்விகள் கேட்ட நாள்</td><td>:</td><td colspan="4">07.05.2026</td></tr>
<tr><td rowspan="2">(v)</td><td rowspan="2">அனைத்து பல்வகை மனுக்கள் மற்றும் அதன் முடிவுகள். முடிவுகளை எதிர்த்து மேல்நீதிமன்றத்தில் முறையீடு செய்யப்பட்டிருந்தால் அதன் முடிவுகள். கு.வி.மு.ச பிரிவு 317–ன் கீழான மனுவை தவிர.</td><td rowspan="2">:</td><td colspan="2">குற்றவியல் பல்வகை மனு எண் .</td><td>மனு நாள்</td><td>முடிவு</td></tr>
<tr><td colspan="2">–</td><td>–</td><td>–</td></tr>
<tr><td rowspan="2">(vi)</td><td rowspan="2">சாட்சிகள் முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை செய்யப்பட்ட நாள்</td><td rowspan="2">:</td><td colspan="2">விசாரணை செய்யப்பட்ட சாட்சிகள் பெயர்</td><td>முதல் விசாரணை செய்யப்பட்ட நாள்</td><td>குறுக்கு விசாரணை செய்யப்பட்ட நாள்</td></tr>
<tr><td>அ.சா. 1</td><td>ராஜேந்திரன்</td><td>07.05.2026</td><td>07.05.2026</td></tr>
<tr><td>(vii)</td><td>கு.வி.மு.ச பிரிவு 313–ன் கீழ் எதிரியிடம் விசாரணை செய்யப்பட்ட நாள்</td><td>:</td><td colspan="4">07.05.2026</td></tr>
<tr><td>(viii)</td><td>எதிரி தலைமறைவான மற்றும் முன்னிலையான / முன்னிலைபடுத்தப்பட்ட</td><td>:</td><td colspan="4">-</td></tr>
</table>

MEENATCHI MURUGAN

Digitally signed by MEENATCHI MURUGAN
Date: 2026.05.08 11:49:24 +0530

07.05.2026

Dm Cum Jm,
Valparai.

| | | | |
|---|---|---|---|
| | விபரங்கள் | | |
| (ix) | மேல்நீதிமன்றத்தில் தடையாணை பெற்றிருந்தால் அதன் முடிவுகள். | : | அமர்வு நீதிமன்ற கு.ப. ம.எண்கள் / உயர்நீதிமன்ற எண் மற்றும் தடையாணை நாள் / முடிவு<br>- / - / - |
| (x) | குற்றத்தின் சாராம்சம் | : | 01.01.2026–ம் தேதி 13.15 மணிக்கு வால்பாறை காவல் நிலைய சரக எல்லைக்குட்பட்ட ரொட்டிக்கடை ஜங்கில் ெ ஹஸ்ட் ஹவுஸ் அருகில் எதிரி பொது இடத்தில் வைத்து பொதுமக்களுக்கு இடையூறாகவும் அச்சுறுத்தும் வகையிலும் மது அருந்திய குற்றத்திற்காக சட்டப்பிரிவு 4 – A TNP Act –ன் கீழ் |
| (xi) | எதிரியின் பதில் | : | பொய் வழக்கு, குற்றவாளி இல்லை. |
| (xii) | நீதிபதியின் முடிவு | : | எதிரி மீதான சட்டப்பிரிவு 4 – A TNP Act –ன் கீழான குற்றச்சாட்டை பொறுத்து குற்றவாளி என முடிவு. |
| (xiii) | நீதிபதியின் தீர்ப்பு | : | 1. எதிரி மீதான சட்டப்பிரிவு 4 –A TNP Act –ன் கீழ் உள்ள குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளது என இந்நீதிமன்றம் முடிவு செய்து, எதிரிக்கு ரூபாய் 1000/– அபராதம் விதித்தும், அபராதம் கட்டத்தவறினால் 7 நாள் மெய்க்காவல் சிறைதண்டனை விதித்து 278(2) BNSS Act–ன் விதித்தும்,<br><br>2. இவ்வழக்கில் தீர்ப்பின் மீது மேல்முறையீடு செய்யப்பட்டிருந்தால் மேல்முறையீட்டு நீதிமன்றத்தில் ஆஜராவதற்காக பெறப்பட்ட 481(1) BNSS பிணைப்பத்திரமானது இன்றைய தேதியிலிருந்து 6 மாத காலத்திற்கு அமலில் இருக்கும் என்றும் பின்னர் தானாக ரத்தாகிவிடும் என்றும் உத்தரவிடப்படுகிறது.<br><br>3. இவ்வழக்கில் வழக்கு சொத்து தாக்கல் செய்யப்படவில்லை. |

MEENATCHI MURUGAN

Digitally signed by MEENATCHI MURUGAN
Date: 2026.05.08 11:49:29 +0530

07.05.2026

Dm Cum Jm,
Valparai.

இவ்வழக்கானது இதுநாள் வரையில் இந்நீதிமன்ற விசாரணையில் இருந்து 07.05.2026–ம் தேதி இறுதி விசாரணைக்கு வந்தபோது அரசு தரப்பில் திரு. ராமசந்திரன், B.Sc., LLM., அரசு உதவி வழக்கறிஞர், நிலை–1 அவர்களும், எதிரி தரப்பில் வழக்கறிஞர் திரு.R.R.பெருமாள், B.A., B.L., அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பினரும் எடுத்துரைத்த வாதுரைகளை கேட்டும், ஆவணங்களை பரிசீலனை செய்தும், இன்று இந்நீதிமன்றம் வழங்கும்...

**<u>தீர்ப்புரை</u>**

**வழக்கின் சுருக்கம்:**

1. எதிரி கடந்த 01.01.2026–ம் தேதி 13.15 மணிக்கு வால்பாறை காவல் நிலைய சரக எல்லைக்குட்பட்ட ரொட்டிக்கடை ஜங்கில் ெஹஸ்ட் ஹவுஸ் அருகில் எதிரி பொது இடத்தில் வைத்து பொதுமக்களுக்கு இடையூறாகவும் அச்சுறுத்தும் வகையிலும் மது அருந்திய குற்றத்திற்காக சட்டப்பிரிவு 4 – A TNP Act –ன் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2. இறுதி அறிக்கை பரிசீலனைக்கு பின் இந்நீதிமன்றத்தில் எதிரிக்கு எதிராக இவ்வழக்கை கோப்பிற்கு 10.02.2026–ம் தேதி அன்று சுருக்கு விசாரணை வழக்கு எண் 35/2026ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு, எதிரிக்கு 263 BNSS–ன்படி அழைப்பாணை அனுப்பப்பட்டு, எதிரி இந்நீதிமன்றத்தில் முன்னிலையானவுடன் 230 BNSS–ன் படி வழக்காவணங்களின் நகல்கள் இலவசமாக வழங்கப்பட்டது.

3. எதிரிக்கு போதிய கால அவகாசம் வழங்கி வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்ததில் வழக்கில் எதிரிக்கு எதிராக முதற்நோக்கு முகாந்திரம் இருந்ததால் இருந்ததால் 251 BNSS–ன் படி சட்டப்பிரிவு 4 – A TNP Act –ன் கீழான குற்றச்சாட்டின் சாராம்சத்தை எதிரிக்கு புரியும்படி தமிழ் மொழியில் படித்துக்காட்டி விளக்கிகூறி வினவியபோது எதிரி பொய் வழக்கு, குற்றவாளி இல்லை என்று மறுத்து, வழக்கு விசாரணை

MEENATCHI MURUGAN Digitally signed by MEENATCHI MURUGAN Date: 2026.05.08 11:49:35 +0530

07.05.2026 Dm Cum Jm,
Valparai.

செய்யப்பட வேண்டும் என கூறினார். எனவே, அரசு தரப்பு சாட்சிகளின் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

4. பின்னர் இந்நீதிமன்றத்தில் அரசுதரப்பு வழக்கை நிரூபிப்பதற்காக அ.சா.1 சாட்சி விசாரணை செய்யப்பட்டு, அ.சா.ஆ.1 சான்றாவணம் குறியீடு செய்யப்பட்டது.

**<u>அரசுத்தரப்பு சாட்சியத்திலிருந்து புலப்படும் வழக்கின் சுருக்கம் :–</u>**

5. கூடுதல் விசாரணை அதிகாரியான அ.சா.1 தனது சாட்சியத்தில், கடந்த 01.01.2026–ம் தேதி பணியில் இருந்த போது, நானும், தலைமை காவலர் 1199 திரு.ராஜன் மற்றும் 1360திரு. அருண்குமார் ஆகியோர்களுடன் மதுவிலக்கு, சூதாட்டம், கஞ்சா ஆகிய குற்றங்கள் நடைபெறுவதை தடுக்க நிலைய சரகத்திற்குட்பட்ட வால்பாறை டவுன், புதுத்தோட்டம், காமராஜ் நகர் ஆகிய பகுதிகளில் கண்காணித்துக்கொண்டிருந்தபோது ரொட்டிக்கடை ஜங்கில் ெ ஹஸ்ட் ஹவுஸ் அருகில் வந்தபோது அங்கு இருந்த நபர் பொது இடத்தில் பொதுமக்களுக்கு இடையூறாகவும், அச்சுறுத்தும் வகையிலும் மது அருந்திக்கொண்டிருந்தவரை பிடித்து விசாரித்தபோது முன்னுக்குபின் முரணாக பதில் அளித்தவர் இறுதியில் தனது பெயர் இஸ்மாயில் என்று கூறியவரை காரணம் கூறி 13.15 மணிக்கு கைது செய்து, பின்னர் 13.45 மணிக்கு எதிரியை நிலையம் கொண்டு வந்து நிலைய குற்ற எண் 02/2026 ச/பி 4–A TNP Act–ன் கீழ் அ.சா.ஆ.1 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து, பின்னர் சாட்சிகள் தலைமை காவலர் 1199 திரு.ராஜன் மற்றும் காவலர் 1360 திரு. அருண்குமார் ஆகியோரை தனித்தனியே விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்து, பின்னர் எதிரியை தக்க இரு நபர் ஜாமீனில் விடுவித்ததாகவும், இத்துடன் எனது புலன் விசாரணையை முடித்து 01.01.2026–ம் தேதி எதிரி மீது சட்டப்பிரிவு 4 –A TNP Act–ன் படி குற்ற இறுதி அறிக்கை தயார் செய்து நீதிமன்றத்தில் சமர்ப்பித்தேன் என்று சாட்சியமளித்துள்ளார். புலன்விசாரணை குறித்து

MEENATCHI MURUGAN Digitally signed by MEENATCHI MURUGAN Date: 2026.05.08 11:49:40 +0530

07.05.2026 Dm Cum Jm,
Valparai.

ஆவணங்களின் அடிப்படையில் அ.சா.1—ன் சாட்சியத்தோடு அரசு தரப்பு சாட்சிகள் முடிக்கப்பட்டுள்ளது.

7. அரசு தரப்பில் எதிரிக்கு எதிராக அளித்துள்ள சாட்சியத்தை பொறுத்து எதிரியிடம் 351 (1) (ஆ) BNSS—ன் படி கேள்வி கேட்கப்பட்டு அதற்கு எதிரி அளித்த பதிலை இந்நீதிமன்றம் பதிவு செய்து கொண்டது.

8. இவ்வழக்கினை நிரூபிப்பதற்காக அரசு தரப்பில் அ.சா.1சாட்சி விசாரிக்கப்பட்டு, அ.சா.ஆ.1 சான்றாவணத்தை குறியீடு செய்யப்பட்டுள்ளன. பின்னர் இருதரப்பு வாதங்களும் அனுமதிக்கப்பட்டது.

**அரசுதரப்பு வாதம்**

9. அரசுதரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் அவர்கள் தன் வாதத்தில் அரசுதரப்பில் எதிரி மீதான குற்றச்சாட்டு அ.சா.1 சாட்சியத்தின் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது என்றும், எனவே எதிரிக்கு தக்க தண்டனை வழங்கும்படி வாதிட்டார்.

**எதிரி தரப்பு வாதம்**

10. எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில், எதிரி மீதான குற்றம் குறித்து தகுநிலை ஐயப்பாடிற்கிடமில்லாமல் அரசு தரப்பில் நிரூபிக்கப்படவில்லை என்றும், எதிரியை விடுதலை செய்ய வேண்டும் என்றும் வாதிட்டார்.

11. இருதரப்பு வாதங்களையும் கேட்டபிறகு, சாட்சி மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்து பிறகும், இவ்வழக்கில் இந்நீதிமன்றம் தீர்வு காணப்பட வேண்டிய பிரச்சனை என்னவென்றால்,

12. அரசு தரப்பில் எதிரிக்கு எதிராக சட்டப்பிரிவு 4 – A TNP Act—ன் படியான குற்றச்சாட்டு அரசுதரப்பில் தகுநிலை ஐயப்பாட்டிற்கு இடமில்லாமல் நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதேயாகும்.

MEENATCHI MURUGAN Digitally signed by MEENATCHI MURUGAN
Date: 2026.05.08 11:49:47 +0530

07.05.2026

Dm Cum Jm,
Valparai.

**தீர்வு :—**

13. அ.சா.1 தனது சாட்சியத்தில், கடந்த 01.01.2026—ம் தேதி பணியில் இருந்த போது, நானும், தலைமை காவலர் 1199 திரு.ராஜன் மற்றும் காவலர் 1360 திரு. அருண்குமார் ஆகியோர்களுடன் மதுவிலக்கு, சூதாட்டம், கஞ்சா ஆகிய குற்றங்கள் நடைபெறுவதை தடுக்க நிலைய சரகத்திற்குட்பட்ட வால்பாறை டவுன், புதுத்தோட்டம், காமராஜ் நகர் ஆகிய பகுதிகளில் கண்காணித்துக்கொண்டிருந்தபோது ரொட்டிக்கடை ஜங்கில் ெஹஸ்ட் ஹவுஸ் அருகில் வந்தபோது அங்கிருந்த நபர் மது அருந்தி கொண்டிருந்தவரை அவர் எதிரி என தெரிய வந்து, மேற்படி, எதிரி பொது இடத்தில் வைத்து மது அருந்தி பொதுமக்களுக்கு இடையூறாகவும், அச்சுறுத்தும் வகையிலும் ஏற்படுத்திய எதிரியை காரணம் கூறி கைது செய்து, பின்னர் எதிரியை நிலையம் கொண்டு வந்து நிலைய குற்ற எண்.02/2026, சட்டப்பிரிவு 4 – A TNP Act—ன் கீழ் அ.சா.ஆ.1 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ததாக அளித்துள்ள சாட்சியம் அரசு தரப்பின் வழக்கை உறுதிபடுத்தும் விதமாக உள்ளது. புலன் விசாரணை குறித்து அ.சா.1 சாட்சியத்தை எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யவில்லை, அ.சா.1—ன் சாட்சியத்தை மறுத்து எதிர் தரப்பில் ஆட்சேபனை எதுவும் தெரிவிக்கவில்லை.

15. எதிரி மீதான சட்டப்பிரிவு 4 – A TNP Act —ன் கீழ் உள்ள குற்றச்சாட்டு அரசு தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளது என இந்நீதிமன்றம் முடிவு செய்து, எதிரியிடம் தண்டனையை பற்றி வினவிய போது கீழ்கண்ட பதில் அளித்தார்.

**எதிரியின் பதில்:**

**மன்னித்து குறைந்தபட்ச அபராதம் விதிக்க வேண்டுகிறேன்.**

MEENATCHI MURUGAN Digitally signed by MEENATCHI MURUGAN Date: 2026.05.08 11:49:54 +0530

07.05.2026 Dm Cum Jm,
Valparai.

16. மேற்கண்ட பரிசீலனைலிருந்து, எதிரி பொது மக்களுக்கு இடையூறு ஏற்படுத்தும் வகையில் அநாகரிமான முறையில் பொது இடத்தில் அமர்ந்து அரசு மதுபானத்தை அருந்தியுள்ள குற்றத்திற்காக சட்டப்பிரிவு 4 – A TNP Act–ன் –ன் கீழான குற்றச்சாட்டு அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளது என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**எனவே முடிவாக,**

1. எதிரி மீதான சட்டப்பிரிவு 4 –A TNP Act –ன் கீழ் உள்ள குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளது என இந்நீதிமன்றம் முடிவு செய்து, எதிரிக்கு ரூபாய் 1000/– அபராதம் விதித்தும், அபராதம் கட்டத்தவறினால் 7 நாள் மெய்க்காவல் சிறைதண்டனை விதித்து 278(2) BNSS Act–ன் விதித்தும்,

2. இவ்வழக்கில் தீர்ப்பின் மீது மேல்முறையீடு செய்யப்பட்டிருந்தால் மேல்முறையீட்டு நீதிமன்றத்தில் ஆஜராவதற்காக பெறப்பட்ட 481(1) BNSS பிணைப்பத்திரமானது இன்றைய தேதியிலிருந்து 6 மாத காலத்திற்கு அமலில் இருக்கும் என்றும் பின்னர் தானாக ரத்தாகிவிடும் என்றும் உத்தரவிடப்படுகிறது.

3. இவ்வழக்கில் வழக்கு சொத்து தாக்கல் செய்யப்படவில்லை.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு இன்று 2026–ம் ஆண்டு மே மாதம் 07–ம் நாள் என்னால் அவையறிய திறந்த இந்நீதிமன்றத்தில் பகரப்பட்டது.

MEENATCHI MURUGAN Digitally signed by MEENATCHI MURUGAN
Date: 2026.05.08 11:50:00 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், வால்பாறை.

07.05.2026

Dm Cum Jm,
Valparai.

**அரசு தரப்பு சாட்சிகள் :–**

| | |
|---|---|
| அ.சா.1 | ராஜேந்திரன் (உதவி ஆய்வாளர்) |

**அரசு தரப்பு சான்றாவணங்கள் :–**

1. அ.சா.ஆ. 1 – முதல் தகவல் அறிக்கை

**எதிரி தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள் :–** இல்லை.

**சான்றுப் பொருட்கள்:-** இல்லை.

**குறிப்பு:–**

1. எந்த சாட்சியும் மூன்று முறைக்குமேல் அழைக்கப்படவில்லை,
2. இவ்வழக்கில் வழக்கு சொத்துகள் எதுவும் தாக்கல் இல்லை,
3. இவ்வழக்கின் முடிவு குறித்து காவல்துறைக்கு தெரிவிக்கப்பட்டது.

MEENATCHI MURUGAN Digitally signed by MEENATCHI MURUGAN
Date: 2026.05.08 11:50:12 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், வால்பாறை.

07.05.2026

Dm Cum Jm,
Valparai.